உ

கடவுள் துணை.

24 காஞ்சீபுரம்

# வரதராஜப் பெருமாள் உற்சவச் சிந்து.

இஃது,

சிறுமணவூர்,

முனிசாமி முதலியார்

அவர்களால்

இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1906.

28

ஸ்ரீ
ராமஜெயம்.

காஞ்சீபுரம்

# வரதராஜப்பெருமாள்

# உற்சவச் சிந்து.

பல்லவி.

காணவேவேணும் கெருடசேர்வை
காணவேவேணும்

அநுபல்லவி.

காணவேணும்நல்ல கருணைபொழியுங்கச்சி
மாநகர்வாழ்கின்ற மகிழும்வரதர்பதம் கா

சரணங்கள்.

சங்குசக்கரமவர் தரித்தபுஜத்தின்சோதி
சகலதேவர்கொண் டாடுமிவர்நீதி
தங்கக்கருடனேறி வருகிறாரிவர்சாரி
தாளமத்தளங்கொட்டி வீணையிசைகளோதி
அன்பர்கள்கூடி சுற்றிலும்வேதியர்
அருமறைபாடி வர
பட்டுக்குடைபிடிக்க பாவலர்கள்நடிக்க
பன்னீரரழ்வார்படிக்க பக்தரொலர்ந்துதிக்க
இஷ்டமானஅம்பு தூணிகோதண்டமின்ன
யிசைந்தசந்திரவால வட்டங்கலகலென்ன
வருகிறசோதி அன்பர்வெண்சாமரம்
போடுறார்பாரீர் சிலர்
திருவாய்மொழிகள்பாடி வருகும்சேர்வைநாடி
சித்தங்களிக்கவன்பர் பக்தியுடனேகூடி
பரிவாய்தேவர்கள்புஷ்ப மாரிகள்பொழிந்தாடி
பக்ஷமுடனேபெருந் தேவியம்மையின்கூடி
வருகிறகாட்சி கண்டவர்பிணியெல்லாம்
இன்றுடன்போச்சி
பக்தவச்சலனெனும் பரமகல்யாணனை
பாரெங்கும்போற்றிடும் பக்தவதாரனை
சித்தங்களித்தன்பர்க் கருள்தரும்நேயனை
ஜென்மப்பிணியொழிக்குங் கரிஹரிவரதனைக்
காணவேவேணும் வரதர்சேர்வை
காணவேவேணும்

பாவம்துலையகச்சி பார்த்ததேசுகமாச்சி
பக்தியுடன்திருச் சூரணமணிநேர்த்தி
கோபுரதெரிசனங் கொண்டதேகுறைபோச்சி
குவலயத்தோருக்குக் காணுதபெருங்காட்சி
காணவேவேணும் வரதர்சேர்வை
காணவேவேணும்.

இராகம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயன்சிங்காரங்களைப்பாரும் வரதர்வார
வைபோகங்களைக் கண்ணுல்பாரும்

அநுபல்லவி.

வையம்புகழ்கிரிநகர்வாசன் துய்யன்கச்சி யருள்பிரகாசன்
மெய்யன்மன தினிலுனைநேசன் செய்யன் திருமகாதேவரா

சரணங்கள். [ஜன் ஐய

மங்களவிமானகும்பம் கோபுரமதில் தங்கவொளிர்வானஸ்த
ம்பம் பெருந்தேவித்தாயார் பொங்கமாய் விளங்கும்ஜம்பம் சித்தி
ரமண்டபம் யிங்கிதபிரகாசவிளம்பம் ஆழ்வார்கள்போற்றும் மே
கமேயளாவுகிரிச்சொர்னன் விமானதிசை யாகஞ்செய்பிர்மாவுக்
குப்பிரசன்னன் மோக்ஷம்தந்திடும் யோகசெல்வர்க்கேஉற்சவமெ
ன்ன ஆதிகாரள்வார் மோகமாய்வரும்பிரகாசமென்ன வைகாசி
மாதம் சித்திரைநக்ஷத்திரத்தினில் நற்கொடியேற தங்கச்சப்ரமஞ்
சத்தினிலேறவே வானவர்பொன்மழைதூற லோகங்களெல்லாம்
முற்றிலுவந்துபசாரமெனப் பணிமார அந்தணர்கோடி பற்றியுட
ன்திருவாய்மொழிநல்மறைகூற வரும்போதையன் கச்சிநகரொங்
கும் அலங்காரப்பச்சைதோரணவீதி புஷ்பபந்தல்கள் உச்சிதரச
குண்டுகள் லஸ்டர்தீயாமணிக்கச்ஜோதிவேடிக்கையுடன் மெச்சி
யேசிங்கவாசனமேறியே வரதன்வாரவீதி வீதிகள்தோறும் பச்
சைப்பந்தல்கள்பூரண உச்சிதம்சிரிக்கும்ராஜவீதி மாதர்களாட
அன்னவாகனமீதிலேறும் சேர்வைதருங்கீர்த்தி இன்னம்சம்பிரம
த்துடன் வேறேவாகனங்கள்மாற்றி வர்னக்குடைகள்கவிழ மிக
மலர்சாற்றி சொர்னசூரியப்ரபைவருகிறநேர்த்தி ஐய

மாதவர்முனிவர்கூட-எழில்மறையோர்-வேதமுறை பாடியா
டபேரிகைமேவும்-போதவேமுழங்கிஜாட மகாவெகு-விநோதக்கீ
தங்கள்பாட-தங்கக்கெருடன்-வாகனத்திலேறிவரும்சட்டம் - பூச்
சக்ரக்குடை-மோகனசுருட்டியாலவட்டம்-பணிகள்மார-யோகவ
திகாரருஜதிட்டம்-லோகங்களெல்லாம்-மேகஜென்கோஷ்டமிடும்

மங்களமாக-கோபுரதரிசனசேர்வைகள் தரும்விநோதன் - கச்சித் தெருவில்பாபவிமோசன- மாகவரந்தருநாதன் - கெங்கைகொண் டானல்-சோபிதமண்டபமேவு மலங்கிருதபோதன்-லோகாராட்டி யன்-நேர்பணிதேவர்கள்-யாவர்கள்தொழுதிடும்வேகன்- வைபோ கராஜன்-பக்ஷமுள்ள அநுமார்மிசை-மெச்சியேவரும்சிங்காரன் தா னும்-கம்பபாணங்கள்-லட்சம்பதினாயிரம்- தீவட்டிமத்தாப்புஒளிர் தோணும்-ஆகாஷபாணம் - நட்சத்திரமண்டமளாவும் வேடிக்கை கள்பார்க்கவேவேணும்-விநோதங்களை- தக்ஷணராஜர்களெல்லாம் உச்சிதம்பார்க்கவேமனம்பூணும் - சந்திரபிரபைமேல் - யேளுகை சிங்கம் மேதினியையாளும்-ராஜராஜர்கள்சூழ்ந்துமேவர ஐய

தண்டிகைபல்லக்கின்மேலே-மோகினிவேஷம் - கொண்டுது ரைத்தனம்போலே-ஆளியின்மேல்-சண்டமாய்வருவதாலே -கால மேசப்ரமீதினிலெளுந்தருளக்கண்டு-ஆனைவாகனம்- ஜோதிதெரிச னமெத்தவுண்டு-யிவர்மைத்துனன்-ஆதிகம்பருக்கு யேச்சலுண்டு- பிர்மாண்டபுஷ்பரதத்தின்மேல்கொண்டு-வரும்போதையன் - யிந் திரலோகம்போல்- முழங்கிடுந்துந்துமியோசை - மணிகள்சபதம்- வந்துமேதேவர்புகழ்ந்துவணங்கியபூசை வண்டிகளோசை-சுந்திர பஞ்சவர்னக்கிளிகொஞ்சுகிறபாஷை-லோகத்திலுள்ளோர்- வந்து ஜெனங்கள் வடங்களிழுக்கிறஆசை-ராஜகெம்பீரன் - குதித்து தங் கக்குதிரையேறியே-வரதன்வரும்வேகம்-கச்சித்தெருவில்-உதித்த யேகாம்பருக்கு நகைப்புயெதிர்சவாரியோகன் - போர்வைகளை ந்து - போந்தவெட்டிவேர்சப்ரமதைநாடி-மிகுந்தவரும் - கொடி யையிழிவுகொண்டாடி-பகர்ந்திராமலிங்க-னற்பதம்பாடிமகிழ்ந்து துதிசெய்திடவும் புண்யகோடி. ஐய

இராகம்-சாமா-ஆதிதாளம்.

ஹரிநமோஸ்துசிந்தமென் றடியார்கள் போற்றிசெய்
ஐயன்புகழைக்கேளையா என்னையன்
ஐயன்புகழைக்கேளையா

அண்டரண்டபகி ரண்டங்களையுமுண்ட
கொண்டல்வண்ணனையா என்னையன்
கொண்டல்வண்ணனையா

ஆதிமூலமென் றோதும்யானைக்கருள்
சாதித்தகையனையா என்னையன்
சாதித்தகையனையா

இங்குமங்கும்யெங்கு மெங்கும்ஒன்றாய்த்தங்கும்
யேகாந்தரூபனையா என்னையன்
யேகாந்தரூபனையா

ஈசாசர்வேசாவென் ருசையோடுபூசிக்கும்
தாசர்கள்நேசனையா என்னையன்
தாசர்கள்நேசனையா
உம்பர்களுந்தினம் னம்பியேபோற்றிசெய்
யெம்பெருமானையா என்னையன்
யெம்பெருமானையா
ஊழ்வினைகளென்பதை தாழ்வரச்செய்திடும்
ஆழிக்கையனையா என்னையன்
ஆழிக்கையனையா
எள்ளுக்குளெண்ணெய்போல் யெங்குமொன்றாய்நிறைந்த
யெந்தைபிரானையா என்னையன்
யெந்தைபிரானையா
ஏந்திழையாமந்த பாஞ்சாலிக்கித்துயில்
யிதங்கியளித்தானையா என்னையன்
யிதங்கியளித்தானையா
ஐந்துபூதமமர்ந்த பஞ்சபாண்டவர்கள்முன்
கொஞ்சுங்கிருஷ்ணனையா என்னையன்
கொஞ்சுங்கிருஷ்ணனையா
ஒருவனியென்னுமென் னிருவினைகளைப்போக்கும்
அரிபரந்தாமனையா என்னையன்
அரிபரந்தாமனையா
ஓம்நமோநாராயணாவென் றுச்சரிப்பவர்கள்முன்
ஏன்யெனநின்றானையா என்னையன்
ஏன்யெனநின்றானையா
ஔவியமில்லாதவர்க்கே திவ்வியபதமளித்
துதவும்புருஷோத்மனையா என்னையன்
உதவும்புருஷோத்மனையா
அக்கனுெடுமேவு மிக்கநற்சிவகாமி
யொக்கப்பிறந்தோனையா என்னையன்
யொக்கப்பிறந்தோனையா

அரனேத்துமசியென்று துதியாதனுக்குமுனை யஞ்சலிசெயா தகைகள், ஆனந்தசேவைதனைக் காணாதகண்களுன் னாலயம்வராத கால்கள், சரணகெங்காஸ்நானம் பண்ணிதிருமண்காப்பு தரித்து மரியாததேகம், சந்ததமுநினையாத சிந்தையுமவர்க்குநீ தந்தவா றென்னென்றுமே, பிர்மனைவினவியிப் படியமைக்காதவிதம் பேசியதின்பிழைபொறுத்து, பிரணவசொரூபனே ஸ்ரீமகள்மணாளனே பேரின்பமதுதருகுவாய், அரனயன்முதலோர்கள் வந்தடிபணிந்தேற்றும் அண்டர்புகழ் கச்சிநகர்வாழ், கருணாகரானந்த பிரணவசொரூபனே கரிவரதராஜதுரையே.

உனதுசெயலல்லாது அணுவுமசையாதென்னும் உண்மைதனையெண்ணாமலே, ஊத்தையாம்பீத்தோலை மெய்யாகவேநம்பி உலகமதங்கொண்டுமென்மேல், சினமதுமிகழ்ந்துபாழ்த் தீப்பற்றிவேகின்ற சிந்தனையோர்வழிபடாமல், தீவினைக்காளாக பாவங்கள்செய்துமே திரிந்தலைந்தழிபவர்போல், எனதுபொருளெனதுமனை யென்பந்துவர்க்கங்கள் யென்தம்பிமக்களென்றும், எண்ணுதுமெண்ணுவோன் யெமன்வந்தழைக்கும்போ திவரெலாமுதவுவாரோ, கனகமயசித்ரகோ புரநிறைப்பதியெனக் காணெழிற்கச்சிநகர்வாழ், கருணாகரானந்த பிரணவசொரூபனே கரிவரதராஜதுரையே.

ஆத்திமதிகங்கைமுடி யோன்போற்றிசெய்திடும் ஆனந்தவைகுந்தனே, ஆலிலையிற்றுயிலு மானந்தமாயனே ஆதிமூலக்கடவுளே சாஸ்திரபுராணமறு பத்துநாற்கலைகளிற் றழைத்தோங்குஞ்சோதிமயமே, சகலபல்லோர்களும் நிதம்நிதம்போற்றிடுஞ் சாற்றுமுக்குணரகிதனே, எத்தியடிதொழுமடிய ரிருதயத்தமுதமே யெங்குநிறைகின்றபொருளே, இனியாகிலுநமக் குதவிசெய்தேயென்னையீடேற்றியெந்தவிதமுங், கருணாகரானந்த பிரணவசொரூபனே கரிவரதராஜதுரையே.

மரமாய்முளைத்தாலும் ஒருதீங்குமில்லாமல் மாதவர்கூட்டமெல்லாம், வந்துநின்றேநிழற் பெருவரதனாலதன் வல்வினைகளும் நீங்கிடும், பரமாகவேயவர் பண்ணிடுதவத்தினால் பாததூள்கள்பரக்க, பாவங்கணீக்கிநற் பதவியைச்சொற்பமாய் பண்புடன்பெற்றுய்யலாம், பரமலோபிகளான பஞ்சமாபாதகப் பாவிகட்குப்பிள்ளையாய், பாருலகிலேவந்து படுதுயர்களுக்கெலாம் பரிவுடன்தீர்த்தருள்வையே, கரஆழிசங்கேந்தும் மெய்யனே துய்யனே கண்ணனேகச்சிநகர்வாழ், கருணாகர்ானந்த பிரணவசொரூபனே கரிவரதராஜதுரையே.

என்னநான்சொல்லியும் ஒன்றுநீயறியாம லிறப்பதுந்தர்மமாமோ, எதுநீயறியாத பாவமோயெளியனா னென்னபிழைசெய்திருந்தும், சொன்னதோவளவில்லை யென்னென்றுகேளாமல் சும்மாயிருந்தாலினி, சொந்தமென்றுன்னைவிட வென்றெனையாள்பவர்த் தொல்லுலகிலெவரையனே, மன்னனேவிண்ணவர்க் கமுதளித்தண்ணலே மாமகளெனுமங்கையை, மார்பிற்றரித்துதீர்க் காயுள்பெற்றேகிடும் மாதவமதுசூதனா, முன்னின்றுகாத்தருள் மூலமேபரமபத மூர்த்தியேகச்சிநகர்வாழ், கருணாகரானந்த பிரணவசொரூபனே கரிவரதராஜதுரையே.

பெற்றநின்பிள்ளையைக் கைவிடுதல்ஞாயமோ பிழைபொருத்தருளாமலே, பேசாதிருந்திடிற் பேருலகிலேயுமது பெருமைக்கு

அழகாகுமோ, சற்றேனும்ஜீவகா ருண்யமில்லையோபடும் சங்கடமெலாமெடுத்து, சந்ததஞ்சொல்லிமுறை யுந்தனுக்குரைக்கவும் சாமிநீயறியாததோ, முற்றுமிப்படியிருந் தாலுன்னைவிடவென்றன் முறைகேட்பவராரையா, மூவர்க்குமுதல்வனே மூலமாய்நின்றவா மூன்றின்மேற்பதவியானே, கற்றவர்களுறவிலா நாயினேனுதலால் காத்தருள்கச்சிநகர்வாழ், கருணாகரானந்த பிரணவசொரூபனே கரிவரதராஜதுரையே.

பொல்லாதவினைகளது வந்துவந்தேயெனைப் போராட்டமிட்டாட்டுதே, பொருத்திடவுமென்தனால் முடியாதுஐயனே போக்கியிதையொழிவதற்கே, யெல்லாமறிந்தநீ யிப்படிச்செய்வது யேர்க்குமோயென்னையனே, யெப்போதுஞ்சாகா திருக்கநான்கேட்கவில்லை யிருக்கும்வரைசௌக்கியமுடனே, நல்லாருடன்கூடி நாவினுலுன்புகழை னடியேயுனைத்துதிக்க, நாயினேன்கேட்கும்வர மீதொன்றுதான்வேறு னுவரங்களில்லை, கல்லாதவரினுனுக் கருணுவாய்சுகவாழ்க்கை கண்ணனேகச்சிநகர்வாழ், கருணாகரானந்த பிரணவசொரூபனே கரிவரதராஜதுரையே.

இராகம்-உசேனி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆதிமூலபிர்மரூபனே அடியேனையிப்போது
ஆதரிக்கவேண்டும் பிரதாபனே.

அநுபல்லவி.

சோதிசேரும்சந்தி ராதித்தரைமொண்டு
தோத்தமெனுந்தன் னருட்கண்ணால்கொண்டு
ஓதும்வேதாகம துட்பொருளாய்த்தங்கும்
உத்தமநித்திய கர்த்தனெனப்பொங்கும் ஆதி

சரணங்கள்.

அயனைக்கொண்டிந்த அண்டங்கள்தோத்துவிப்பாய்
அவரிளமதிச்சடை அரனைக்கொண்டவனைத்தையுநீத்துவிப்பாய்
புயலனையவுருக்கொண்டு தேத்துவிப்பாய்
மிளவுமுளங்கொண்டு பொங்கமுடனேயுண்டவத்தை மாத்துவிப்பாய், மயலரவுளர்வோர்க்கருள்மெய்யனே மாசில்துரியாதீதமற்குந்துய்யனே, சுயம்பிரகாசமெய்ஞ் ஞானனர்ச்சோதியே
தோன்றியும்தோன்றாத நின்றஅனாதியே ஆதி

பாசப்ந்தபவநாசனே பக்தர்களிதய பரிமளமுயர் பதுமவாசனே
மீசும்ரேசமொனும்பிரகாசனே கிருபாநிதியாய்
விளங்குந்தத்துவ ஞானநேசனே

மோசமுதலைசெயும் மிகத்தொல்லையே
முற்றுமென்னால்சகிக்கப் போவதில்லையே
ஆசினிவேவுமே லோர்க்கருள்கொடுக்கும்
அண்டபகிரண்டங்கள் வயத்திலொடுக்கும் ஆதி

எனதுடலுயி ரொடுங்கிப்போகுதே யிருந்திருந்தென்மனம்
யென்னமோவொரு விதமதாகுதே
அனவரதன்முன் னடியைனுடுதே யிக்கரவினையினல்
அடிக்கடிசித்தம் கலங்கிவாடுதே
உனதுநெஞ்சமதென்னசிலையாஉனைப்பதுன்செவிக்கேறவுமிலையா
தனியிலீரேழுலோகசராசரம் தந்தஅனந்தகல்யாணகுணகரா ஆ

இத்தனைகாலமட் டென்னுடனேவாது செய்வதேதிந்த
யேழையைக்கார்ப்பதற்குன் கடனிப்போது
பெற்றவருத்தம் தாயறிவாளென்றோது அதுபோலவே
பிறப்பித்தவனே பராமுகஞ்செய்யொணுது
சுத்தவிமலவியாமகனுதா தூயவேதாந்தபுராயணபோதா
மெத்தவும்சித்தம் அலுத்தனம்தேவா
வேண்டினேனுண்டவா ஆண்டிட வாவா ஆதி

இராகம்-தங்கப்பண்.

தொண்டுசெய்துக்கொண்டிருந்தால்போதும்போதும்
சோம்பாமல் யென்னேழைநெஞ்சே தொ

வண்டுவிழிசெண்டுமுலை கொண்டுயிதழ்பெண்டுகளை
அண்டுவதைவிட்டுநம்மள் கொண்டல்வண்ணன்விண்டுவுக்கே ()

ஒட்டாரமின்றிதொண்டு பட்டர்க்குதுதிக்கின்ற
மிட்டாயிபோலிருக்கும் பட்டாபிராமனுக்கு தொ

எத்தாரணியும்புக ழுத்தானபாதன்மகன்
சத்தாம்பதம்பெறக் கொடுத்தாண்டகண்ணனுக்கே தொ

கோதிலாமதுரைக்கவி யுதமுனிகளைப்போலே
காதல்கொண்டுபேதமின்றி ராதைநாதனுக்கெப்போதும் தொ

வரதராஜப்பெருமாள்

உற்சவச்சிந்து

முற்றிற்று.